தத்துவ விளக்கம்.

உ
சிவமயம்

முன்னுரை

எம் குருநாதர் திருச்சி, சமரச சத்திய ஞானசபைத் தலைவர், ஞானசித்தர் திரு. ஜோதி இராமசாமி தேசிகர் அவர்களுக்கும், சபை துணைத்தலைவர் ஞானச்செம்மல் திரு. பொ. ராமானுஜதேசிகர் அவர்களுக்கும், திருவளர்சோலை, யாழ்ப்பாணம் சண்முகானந்தசுவாமி அவர்களுக்கும், முதற்கண் அடியேன் அவர்களின் பொன்னார் திருவடிக் கமலங்களுக்கு வணக்கம் செலுத்திக்கொள்கின்றேன்.

எனது அருமை நண்பர் பெரம்பலூர், தாசில்தார், திரு. நாராயணராவ் அவர்கள் திரிபுரா ரகசியம் என்ற நூலை பார்வைக்கு தந்தார்கள். அதை வாசிக்கும்போது என் மனத்தைக் கவர்ந்தது. அதனால் சில குறிப்புகள் அதிலிருந்து எடுத்து வைத்திருந்தேன். அதை சிறு நூலாக வெளியிட்டால் பலருக்கும் பயனுள்ளதாக இருக்குமென்று கருதினேன். அதையே இத்தருணத்தில் "தத்துவ விளக்கம்" என்று தலைப்புக்கொடுத்து வெளியிடலானேன். மெய்கண்டார் அருளிச் செய்த சிவஞானபோதத்தின் 12 சூத்திரத்திற்கும் அதே கருத்தில் மிகச் சுருக்கமாக 12 வரியில் ஒரு நூல் உளது. அதில் நூலாசிரியர் பெயர், ஊர், முதலியன தெரியவில்லை. அந்நூல் எளிதாகவும் சித்தாந்தக் கருத்துகள் அடங்கியுள்ளனவாகவும் அமைந்திருக்கின்றது. அதனையும் இதனோடு இணைத்துள்ளேன். இதைச்சரி பார்த்து தந்த திரு. நாராயணராவ் அவர்களுக்கும் திரு. உலகநாத பிள்ளை அவர்களுக்கும் எனது உளங் கனிந்த நன்றி. அன்பர்கள் பிழைபொறுத்து நன்மையைக் கடைப்பிடிக்க வேண்டுகிறேன்.

அந்தக் கரணங்களை ஜீவனில்லயப்படுத்தினால் ஜீவன் பரம்பொருளில் லயமடைந்துவிடும். ஆனால் ஜீவன் வேறு

பரம்பொருள் வேறு அல்ல. எப்படி குடத்தில் பிரதிபலிக்கும் ஆகாயமும் அகண்ட வெளியாக இருக்கும் ஆகாயமும் ஒன்றே அதேபோல் இந்த சரீரத்திற்குள்ளிருக்கும் ஆன்மாவும் வெட்ட வெளியாக இருக்கும் பரமான்மாவும் ஒன்றே தான் நம் உடம்பில் ஆன்மா எப்படி இருக்கின்றது? ஒளிவடிவாக இருக்கின்றது. பரம்பொருள் பேரொளி. நாம் சிற்றொளி சிற்றொளி பேரொளியைச் சாரவேணும். சார்ந்துவிட்டால் அதுவே முத்தி. பின் இந்த ஜீவனுக்கு பிறப்பு இறப்பு கிடையாது. இதற்கு நாம் என்ன செய்ய வேணும். நாம் யார் என்ற விசாரணையில் இறங்கவேணும். முதலில் இந்தச்சரீரம் நாமா? சரீரம் அழிவதால் நாமல்ல. பிறகு பொறி புலன்கள் நாமா? அதுவும் அசேதனமாதலால் நாமல்ல. பிறகு அந்தக் கரணங்கள் நாமா? அதுவும் விகாரமடைவதால் நாமல்ல. பிறகு பிராணவாயு நாமா? அதுவும் தசவாயுக்களில் ஒன்றெனபடியால் நாமல்ல. பின் எதுதான் நாம்? சுத்த அறிவே நாம். இப்படி சதா விசாரணை பண்ணிக் கொண்டிருந்தால் அதுவே நம்மைப் பரம்பொருளில் சேர்த்துவிடும். "தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம்" என்பது பழமொழி. தன்னை அறிவதுதான் ஆன்மாவை அறிவது. ஆன்மாவை அறிந்து விட்டால் பரமாத்மாவை அறிந்து அம்மயமாகி விடலாம். அறியும் வரையில் மாயை. அறிந்துவிட்டால் மாயையின் சம்பந்தம் நமக்கு இல்லை. பரமாத்மா எப்படி இருக்கிறது. அது சத்து, சித்து, ஆனந்தம், சச்சிதானந்தம், எப்பொழுதும் உள்ளது சத்து. அறிவு மயமாயிருப்பது சித்து. இன்பமயமாயிருப்பது ஆனந்தம். இதுவே பேரானந்தம். ஆன்ம சொரூபமும் இதுவாகவே தானிருக்கிறது.

இதை அறிவதற்கு வழி இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி. இதையே அஷ்டாங்க யோகமெனச் சொல்லுவர். சிந்தனையை சிதறவிடாமல் மனதை ஒருமுகப் படுத்தி தியானத்திலமர்ந்தால் மனதுக்கு தெளிவுண்டாகும். பிறகு அமைதி பெறலாம். இதை முறையாக அனுஷ்டித்து

வந்தால் பரம்பொருளை அடையலாம். இதற்காகப் புறத்தில் தேடி அலையவேண்டியதில்லை. இந்தச் சரீர அமைப்பே கோயிலாக அமைந்துள்ளது. இதை வைத்துக் கோயிலைக் கட்டியுள்ளார்கள். இதற்குச் சான்று திருமூலர் திருவாக்கு

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுர்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

என்பது.

நம்மைப் பேர் சொல்லி அழைத்தால் ஏதோ ஒருவஸ்து ஏன் என்று கேட்கச் செய்கிறது. உள்ளிருந்து இயக்குகிறது. இந்த வஸ்துவைத்தான் கண்டுபிடிக்கவேணும். கண்டுபிடித்துவிட்டால் உலகம் மாயையென்று தெளிவு அடையலாம். இதற்குச் சாதனை அவசியம். சற்குருவின் உபதேசம் பெற்று சாதனையைத் தொடங்கவேணும். ஞான சாதனையில் விருப்பம் உடையவர்கள் திருச்சி, சின்னக் கடைத்தெரு, சமரச சத்திய ஞானசபையை அணுகி மேலும் விளக்கங்களும் உபதேசமும் பெற்றுக்கொள்ளலாம். ஆன்மாவுக்கும் புலன்களுக்கும் வித்யாசம் ஆன்மா சாட்சி மாத்திரையாக இருக்கிறது. புலன்கள் விவகாரத்தில் ஈடுபடுகின்றன. நாமும் உலக விவகாரத்தில் எது வந்தாலும் சாட்சி மாத்திரையாக இருந்துகொண்டு அனுபவங்களைப் புலன்களுக்கு விட்டுவிடவேணும். சுருக்கமாக அவாவினை ஒழித்து, இந்திரிய நிக்ரகம்பண்ணி, கரணவாதனையை ஒழித்து. நனவிற்சுழுத்திபண்ணி, அஞ்ஞான நிவர்த்தி பண்ணினல் ஜீவதெரிசனம் உண்டாகும். அதற்குமேல் சிவதெரிசனம் நிகழும். அவரவர்கள் பக்குவ நிலைக்கேற்ப விளக்கம் பெறலாம். அன்பர்கள் சிந்தித்துப் பயனடைய வேண்டுகிறேன்.

இங்ஙனம்

பட்டமங்கலம்,
28—11—1971.

ஆத. நாச்சியப்பன்

சிவமயம்

விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

சிவபெருமான்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே.

அம்பிகை

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல் போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இருப்புமனங் குழைத்தென்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பிராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரண நூ
புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி.

தட்சணாமூர்த்தி

கல்லாலின்புடை அமர்ந்து நான்மறை ஆறு
அங்க முதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்.

முருகன்

புன்னெறி அதனிற்செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச்செய்து நவையறு காட்சிநல்கி
என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி.

வாழ்த்து

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

உ

சிவமயம்

தத்துவ விளக்கம்

1. கர்த்தவ்யம் (கர்த்தா நான் என்பது) இருக்கும் வரையில் துக்க நாசமோ சுகப் பிராப்தியோ கிடையாது. தேகம் தீயினுல் தகிக்கப்பட்டவனுக்கு பாதத்தில் சந்தனம் பூசினுல் எப்படியோ அப்படித்தான் சுகமடைவதும். அம்பு பாய்ந்த மார்புடையவனை அப்ஸரஸ்திரி தழுவினுல் எப்படியிருக்குமோ அப்படித்தான் கர்த்தவ்ய சேஷமிருக்கிறவன் சுகமடைவதும். க்ஷயரோகமுடையவன் கானத்திலடையும் சுகம்போலத்தான் கர்த்தவ்யசேஷமிருக்கிறவன் சுகமனுபவிப்பதும்.

2. உலகத்தோர் இச்சையினுல் கர்த்தவ்யமென்ற விஷத்தினுல் மூர்ச்சையடைந்து தவிக்கிருர்கள். இந்த மோகத்தைக் கடப்பதற்கு முதற்படி விசாரம் பண்ணுவது. அவிசாரத்தினுல் ஜனங்கள் நாசமடைகிருர்கள். சுகமென்னும் விருக்ஷத்திற்கு விசாரமென்பது முளையடங்கிய பீஜம் (வித்து). சங்கடத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு விசாரமென்பதொன்றே மார்க்கம். இப்படியான விசாரம் அடைவதற்கு ஸாதனம் யாதெனில் எல்லோருடைய ஹிருதய கமலங்களில் வாசம் பண்ணுகிற தேவதையின் மேலான கிருபைதான். பக்தியுடன் ஆராதனை செய்வதுதான் சாதனம். அப்படிச் செய்தால் விசார சூரியனுக உதயம் செய்கிருள். பக்தியும் சிரத்தையும் ஆராதனைக்கு அவசியம். ஜீவர்கள் சுபம் இன்னதென்று அறியாமல் விருதாவாக உற்பத்தியாகி நாசமடைகிருர்கள். அவிசாரத்தின் வலிமையால் சம்சாரமென்னும் (உலக வியவகாரம்) அக்னியினுல் தாபப்படுகிருர்கள். துக்கப்பட்டாலும் அதை விடுவதில்லை.

3. திரிபுரையின் மகாத்மிய சிரவணமான சிரேயஸ் (செல்வம்) உண்டாவதற்கு சத்சங்கம் அவசியம். சர்வ துக்கங்களையும் அழிக்கக்கூடியதான அந்த மூலகாரணம் சாது சங்கமென்றறியுங்கள். ஒரே விஷயம் காலதேச பேத மடைந்து சுகத்தையும் துக்கத்தையும் உண்டு பண்ணு கிறது. அக்கினியானது குளிர்காலத்தில் பிரியமானதா யிருக்க உஷ்ணகாலத்தில் வெறுக்கத் தக்கதாயிருக்கிறது. துக்கத்துக்கு காரணம் ஆசை அல்லது வாஞ்சை. அநேக கோடி வாஞ்சைகளின் மத்தியில் அற்பசுக முண்டாகிறது. இதைச் சுகமென்ருல் தேகமுழுதும் தீயினுல் தகிக்கப்பட்ட வனுக்கு சந்தணத்துளியினுல் குளிர்ச்சியடைந்ததை ஒக்கும் இரதியின் (கலவி) பின் சுமை தூக்கிவந்த எருதுகள்போல தேகம் தளர்ச்சியடைகிறது. ஆகையால் இதில் சௌக்ய மில்லை. இப்படிப்பட்ட அனுபவம் சுவானங்கள் (நாய்கள்) இடத்திலுமிருக்கிறது.

4. சௌந்தர்யம் மனதின் கற்பனை. பாலர்களிடத்தி லும் யோகிகளிடத்திலும் இது தோன்றுவதில்லை. ஜகனத்தி லிருக்கும் (தொடையினுட்பக்கம்) அங்கத்திற்கு அறிவுடை யோரும் மோகத்தை அடைகிருர்கள். இது அருவருப் பானது. இதினுடைய யதார்த்தநிலை மாம்சம், உதிரம், பித்தம், கபம், மலமூத்திரங்களால் கூடியதும் மூத்திரத் துவாரத்திலிருத்து ஜெனித்ததுமான வஸ்து. இப்படிப்பட்ட வஸ்துவினிடம் இரதியை வாஞ்சிக்கிரவர்கள் மலத்தில் உற்பத்தியாகும் கிருமிகளிலும் எப்படி மேன்மையுடையவ ராவர்? சாப்பிட்டவைகளெல்லாம் பரிணமத்தினுல் மலமாகி விடுகிறது. இப்படிப்பட்ட வஸ்துவினிடத்தில் எதைப் பிரியமென்றும் எதை அப்பிரியமென்றும் சொல்லுவது.

5. ஆதியில் சுயம்பிரகாசமான அறிவால் ஜீவனுக்கு புத்தியுண்டாயிற்று. இந்தப் புத்திக்கு அவித்தையின் சேர்க்கை ஏற்பட்டது. இச்சேர்க்கை அறிவால் கவனிக்கப் படவில்லை. ஜீவன் புத்தியின் வசமாகிவிட்டது. அதாவது தாதாத்மியம். புத்தியில்லையென்ருல் ஜீவத்வம் இல்லை.

ஜீவனுடைய சுதந்திரம் புத்தியினுல் மறைக்கப்பட்டுவிட்டது. ஆகையினுல் ஜீவன் புத்தியுடன் ஒன்றுபட்டுவிட்டது. புத்தி அவித்தையுடன்கூடி விருப்பங்கொண்டு மோகத்துடன் கலந்தது. புத்தி மோகத்தினுல் ஆக்ரமிக்கப்பட்டிருந்தாலும் ஜீவனைப் பிரியவில்லை. இதனுல் ஜீவனுக்கும் மோகத்தின் ஸ்பரிசம் ஏற்பட்டது. அதனுல் புத்திக்கு மனது உண்டாயிற்று. மனது சஞ்சல சுபாவமுடையதாகி மோகத்தின் மூடத்தன்மையும் அவித்தையின் குணமும் பொருந்தி விசித்திர சிருஷ்டியில் வல்லமையுடையதாயிற்று. அதனுல் புத்தி தன் சுயமான சத்துவ ரூபத்தைவிட்டு மோக வடிவான மனது கற்பித்த விஷயங்களில் பற்றுதலுடையதாயிற்று. அதனுல் புத்திக்கு சித்துரூபமான ஜீவனிடத்து விசாரணையில்லாமற் போய்விட்டது. ஆனுலும் ஜீவன் மோகத்தினுல் ஆக்ரமிக்கப்படவில்லை. புத்திதான் மோகத்தினுல் வசப்பட்டுவிட்டது. ஆனுல் உலகத்தார் ஜீவனே ஆக்ரமிக்கப்பட்டதென்று சொல்லுகிருர்கள். புத்திதன் குழந்தையாகிய மனதை ஜீவனிடம் விட்டுவிட்டு மோகமே வடிவாகிவிட்டது. அதனுல் மனது சித்தினிடம் தாதாத்மிய மடைந்துவிட்டது. பிறகு மனது கற்பனைகள் செய்வதில் சாமார்த்தியம் பெற்றது. அந்தக் கற்பனையானது மனதை தன் சாமார்த்தியத்தால் வசப்படுத்திக்கொண்டு மனது செல்லுமிடங்களுக்கெல்லாம் தானும் கூடவே சென்று இஷ்டமான ரூபங்களை எடுத்துக்கொண்டு மனதைச் சந்தோஷப்படுத்தியது. இப்படியிருக்கும்பொழுது மனதுக்கும் கற்பனைக்கும் அனுகூலமாக ஐந்து ஞானேந்திரியங்களும் உண்டாயின. இந்திரியங்கள் ஜீவனிடம் விடப்பட்டன. அதனுல் அவைகளும் சுதந்திரமுடையனவாக இருந்தன. தங்கள் பிதாவாகிய மனதையும் தங்கள் வசமாக்கிக்கொண்டு விஷயங்களை அனுபவிக்கும்படி செய்தன. பிறகு ஆசை தோன்றி மனதைப் பற்றியது. விஷய போகத்தினுல் ஆசை அதிகமாயிற்று. இவைகள் நிவிர்த்தியாகாமல் மனது சதா விஷயங்களைத் தேடிக்கொண்டிருந்தது. பின்பு ஆசைக்கு கோபம், குரோதம், உலோபம் உண்டாயிற்று. மனது ஆசையுடன் சேரும்பொழுது குரோதமும் உலோபமும்

அதிகமாயின. அதனால் மனது மூர்ச்சை அடைகிறது. துக்கமும் அடைகிறது. உலோபத்தன்மை ஏற்படும் பொழுது எல்லோராலும் நிந்திக்கப்பட்டு உயிரிழந்ததா கிறது. மனதுக்கு துக்கமுண்டாகும்பொழுது புத்திக்கும் துக்கமுண்டாகிறது. இவ்விதம் நெடுநாள் புத்தியுடன் ஜீவனும் சேர்ந்து துக்கம் அனுபவிக்கும் வேளையில் ஆசையின் வல்லமையால் மனது தன் சுதந்திரத்தை இழந்தது. பிறகு ஏதோ கர்மவசத்தினால் சரீரத்தையடைந்தது. அதில் ஆசையுடனும் குரோதம், உலோபம் முதலியவைகளுடனும் புத்தியுடனும் மனது வாசஞ்செய்துகொண்டு சுகத்தை இச்சித்தும் துக்கங்களையே புசித்ததாக இருந்தது. புத்தியிடம் தாதாத்மியம் (கலப்பால் ஒன்று சேர்தல்) அடைந்த ஜீவனும் அச்சரீரத்தில் வசித்தது. அதில் ஜீவனில்லாவிட்டால் யாரும் இருக்கமாட்டார்கள். மேற்படி அதிஷ்டானத்தால் அவைகளுடைய வடிவங்களையும் ஜீவன் அடைகிறது. ஆனால் ஜீவனை சித்து காலதேச நிமித்தமென்ற மலினமில்லாதது. ஏனென்றால் தாயான அறிவு சுத்தமாயும் நிர்மலமாயும் ஆகாயத்தினும் அதிக விசாலமாயும் அணுவிலும் சூக்ஷ்மமாயும் உள்ளது. ஜீவன் சிற்றறிவுடையது. ஆதாரமில்லாதது, ரூபமில்லாதது, அறியப்படாதது. ஆனந்தமயமான தாயாகிய அறிவுக்கு ஜீவன்கள் அநேகம். ஜீவனுக்கு புத்தியின் கூட்டத்துடன் சேர்க்கையும் பற்றுதலும் இருந்தாலும் மாயாசக்தியின் வல்லமையால் ஜீவசொரூபம் அறிவுக்கு நிகராயிருக்கிறது மனது தளர்ச்சியடையும்போது புத்தியினிடம் இலயமாகிறது. மனது உறங்கும்பொழுது இந்திரியங்கள், குரோதம், உலோபங்கள் ஒடுங்குகின்றன. அவ்வேளையில் ஜீவனின் பிரதிநிதியான பிராணன் நாசியின் வழியாகச் சஞ்சரித்துக்கொண்டு சரீரத்தைக் காப்பாற்றி வருகிறான். இவ்விதம் எல்லாம் ஒடுங்கி சுழுத்தியிலிருக்கும்பொழுது ஜீவன் அறிவையடைந்து ஆனந்தமடைகிறது. தூங்கிக்கொண்டிருந்தவர்கள் எழுந்துவிட்டால் ஜீவனும் பிராணனும் போஷணை செய்து வருகிறார்கள். பிராணன் இல்லாவிட்டால் எல்லோரும் சிதறிப்போய் விடுகிறார்கள். சரீரம் கெட்டுவிட்

டால் வேறு சரீரத்திற்கு பிராணன் அழைத்துச் செல்லுகிறது மனதானது புத்தி பிராணன், ஜீவன் இவர்களது சகாயம் பெற்றிருந்தாலும் கற்பனை, ஆசை, குரோதம் உலோபம் இவர்களுடைய சேர்க்கையால் சதாதுக்கமுடையதாக இருக்கிறது. நரகவேதனை இவர்களாலடைகிறது. புத்தியும் துக்கத்தில் மூழ்கி அறிவிழக்கிறது. ஜீவனும் அதேபோல் அறிவிலி ஆகிவிடுகிறது.

இவ்விதம் வெகுகாலம் ஆனபிறகு புத்திக்கு விஷயங்கள் தோற்றாத வேளையில் சுத்த சித்காரமாகிவிடுகிறது. அக்கலப்பால் வைராக்கியம் கைக்கொண்டு விவேகமடைந்து மனதை வென்றும் குரோத லோபங்களைக் கொன்றும் இந்திரியங்களை பந்தனஞ் செய்தும் நிர்விகர்ப்ப சமாதியடைந்தும் அறிவை அடைகிறது. அதாவது அகண்ட சித்தாத்ம ரூபம் அடைகிறது. வாசனைகளில்லாத நிலையில் துவைத பாவனை ஏற்படும் பொழுதெல்லாம் மேற்படி சித்தாத்ம ரூபத்தை சார்ந்து ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கி சுகமடைகிறது. இதனால் பந்தமோக்ஷங்கள் புத்திக்கன்றி ஜீவனுக்கில்லையென்று தெரிய வருகிறது.

6. சிரத்தையினால் சகல சிரேயஸ்களும் உண்டாகும் யாதொன்றினடைவினால் ஒருவன் பின்னும் சோகவானாகிறதில்லையோ அதனைச் சிரேயஸ் என்றறியவேண்டும். சூக்ஷ்ம புத்தியினால் ஆலோசனை செய்தால் எங்கும் எதனிடத்திலும் துக்கமிருப்பதாகக் காணப்படுகிறது. தனம், புத்திரர், பத்தினி, இராஜ்யம், பொக்கிஷம், பலம், புகழ், வித்தை, புத்தி, தேக சௌந்தர்யம், ஸம்பத்து முதலியவைகளெல்லாம் அஸ்திரமானவையாகவும் காலமென்ற சர்ப்பத்தின் முகத்திலிருப்பதனால் சோகமென்ற முளைக்கு பீஜங்களாகவுமிருக்கின்றன. அவைகளை அனுபவிக்க வேண்டுமென்று ஏற்படுகிற பிராந்தி மோகத்தினால் ஏற்படுகிறது. அவ்விதமாக மயக்குகிறவர் மகேசுவரனே. அவர் சர்வலோகங்களுக்கும் கர்த்தாவானபடியால் அவரால் எல்லோரும் மோகிக்கப்பட்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட மோகத்தினின்றும் விடுபடவேண்டுமானால் அவரை சந்தோஷிப்பிக்கவேண்டும்.

அவரைப் பற்றிக்கொண்டு யாவனொருவன் அவருக்கு மகிழ்ச்சிசெய்து அவருடைய பிரசாதத்தினுல் மகாவித்தையை அடைகிருனோ அவன் அந்த மோகத்திலிருந்து விடுபடுகின் ருன் ஆகையால் எந்நேரமும் எல்லாவிதத்திலும் நிஷ்காம பக்தி. யுடன் அவனையே சரணமடையவேண்டும். சிரேயஸை அடையலாம்.

7. ஈசன் ஏக ரூபனுயிருத்தலால் விஷ்ணுசிவாதி ரூபங் களில் ஒன்று உத்தமமென்றும் மற்ருென்று அதமமென்றும் பேத திருஷ்டி வைத்தல் கூடாது. நிஷ்களமானபர ரூபத்தை உபாசனை செய்யவேண்டும். நிஷ்கள ரூபத்தை உபாசனை செய்ய சாமர்த்தியமில்லாதவன் எந்த ரூபத்தி னிடத்து தன் மனமானது திடமான பக்தியுடன் அழுந்து கிறதோ அதனை உபாசனை செய்து உத்தமமான சிரேயசை யடையவேண்டும். இஃதன்றி கோடி ஜன்மமெடுத்தாலும் வேறுகதியில்லை. ஈஸ்வரனுக்கு வாஸ்துவத்தில் ஸ்தூல தேகமில்லை. ஸ்தூல புத்தியுடையவர்கள் மோகத்தினுல் தேகத்தைக் கற்பித்துக் கொள்ளுகிருர்கள். பக்த சிகாமணி யான ஈசன் அவர்களது விருப்பத்திற்கிணங்க அநேக ரூபங்களை எடுத்துக் கொள்கிருன். ஆதலால் ஈசன் சேதனனே.

8. பராசித்தான சுத்த அறிவே என்தாய். புத்தியே என் தோழி. அவித்தையே அசதியாகச் சொல்லப்பட்டது. அவளுடன்தான் புத்திக்கு சேர்க்கை ஏற்பட்டது. இரஜ் ஜுவினிடத்தில் (கயிறு) சர்ப்பத்தைத் தோற்றுவித்து பயத்தை உண்டுபண்ணுகிற அவித்தையினுடைய விசித்திர மான சாமர்த்தியம் உலகத்தில் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. மகாமோகனே அவித்தையின் புதல்வன். அவன் புத்திரன் மனம். இவன் பத்தினி கற்பனை. இவர்களினின்றும் உதித்த ஐவர்கள் ஞானேந்திரியங்கள். அவர்களிருப்பிடம் இந்திரிய கோளங்கள். விஷயங்களைத் திருடினது மனதி லேற்படும் ஸம்ஸ்காரங்கள் (வாசனைகள்). திருசிய விஷயங் களை அனுபவிப்பது சொப்பன போகமாம். ஆசை என்பதே

கற்பனையின் சக்களத்தி. குரோதமும் உலோபமும் இவளுடைய இருபுத்திரர்கள். நான் சொன்னபுரமானது இந்தச் சரீரம். நான் மொழிந்த மகாமந்திரம் சொரூபத்தில் உண்டாகும் உணர்வே. பிராணன்தான் மனதின் பிரிய தோழனுன பிரசாரகனுகச் சொல்லப்பட்டது. நரகங்களே காடுகள் முதலியவைகளாகக் கூறப்பட்டன. என்னுடன் புத்தியானது கூடுவதுதான் சமாதி. என் தாயினுலகம் சேர்வதுதான் மோக்ஷம் என்று சொல்லப்பட்டது. இதை யுக்தியினுலறிந்து நீங்களும் அனுபவிப்பீர்களானுல் பரமமான சிரேயஸ் உண்டாகும்.

9. ஆத்ம சொரூபத்தை மலினமின்றிய வெளிப் பார்வையில்லாத புத்தியினுல் விசாரித்துப் பாருங்கள், அது திரிசியங்களாகாது (பார்வைக்குரிய பொருள்களாகாது) மொழியக்கூடியதுமன்று. ஆத்ம சொரூபத்தை அறிந்தால் மாதாவை அறியலாம். மேகங்களால் மறைக்கப்பட்ட சூரியன்போல் ஆத்மா ஸ்பஷ்டமாக விளங்கவில்லை. புத்தியினிடம் திருசிய வடிவங்களகன்றுவிட்டால் மேகமின்றிய ஆகாயத்தில் தபனன் (சூரியன்) விளங்குவதுபோல் ஆத்மா விளங்குகின்றது. புத்தியின்கண் விளங்குவதால் அதற்கு பரிச்சேதம் (பின்னம்) ஏற்படுமோவென்ருல் இல்லை. ஏனென்ருல் எங்கும், எல்லாவற்றிலும் எப்பொழுதும் அது விளங்குகின்றது. எவை என்னுடையவை என்று விளங்குகின்றனவோ அவைகளை ஆத்மா அல்லவென்று தள்ளிவிட்டு எதனிடம் என்னுடையதென்று தோன்றவில்லையோ அதனைத்தன் ஆத்மாவென்று அறியுங்கள் உலக விஷயங்களைப்போல விசாரத்தினுல் அறியக் கூடியதுமன்று. விசாரம் அடங்குமிடத்தில் அதுவாகவே விளங்குகிறது. தன் தலையின் நிழலானது முன்னே தாவுவதுபோல் ஒரு பொழுதும் செய்கையினுல் ஆத்மா அடையக்கூடியதன்று. பாலனெருவன் எவ்விதம் ஆயிரக்கணக்கான பிரதிபிம்பங்களைக் களங்கமற்ற கண்ணுடியில் பார்த்தாலும் அக்கண்ணுடியைப் பாராமலிருக்கின்ருனே அவ்விதமே ஜனங்கள் பிரதிபிம்பமான ஜகத்தை தங்கள் ஆத்ம சொரூபமான

கண்ணுடியில் பார்த்தாலும் அதனிடம் பழக்கமின்மையால் தங்கள் ஆத்மாவை அறிகிறதில்லை. உள்ளத்தை சற்று நிரோதம் (ஒடுக்குதல்) செய்து சாமானிய சத்துரூபமான தன்னுலேயே தன் ஆத்மாவைப் பாருங்கள். நிரோதஞ் செய்வது எவ்விதமென்ருல் திருசிய விஷயங்களுக்கு நேரே மனது செல்லுவதை அகற்றி, உள்ளே மனதைச் செலுத்த முயன்று, பார்க்கிறேன் என்ற எண்ணத்தையும் ஒழித்து, அசுந்தகனைப்போல நிச்சலமனதுடன் தர்சனத்தையும் தர்சனமின்மையையும் விலக்கியிருக்கும்பொழுது நீங்கள் எதுவாகஇருக்கிறீர்களோ அதுதான் நீங்கள். அதனைத் தாமதமின்றியடையுங்கள்.

10. கிரந்தியானது (முடிச்சு) எதுவரையில் அவிழாமலிருக்கின்றதோ அதுவரையிலும் சுகம் கிடையாது. மோகமென்ற கயிற்றினுல் ஏற்பட்ட கிரந்திகள் கோடிக்கணக்காக இருக்கின்றன. இங்கே சொரூபத்தை அறியாமலிருப்பதே மோகமென்ற கயிராகும். மோகத்தினுல் விபரீத புத்திகளென்னும் அநேக கிரந்திகள் இருக்கின்றன. முதலாவது தேகேந்திரியங்களில் உண்டாகும் ஆத்ம புத்தியினுல் விலக்க மிகவும் பிரயாசமான இந்த சம்சாரமானது நடந்து வருகிறது. கண்ணுடியிற் பிரதிபிம்பம்போல தோற்ற மாத்திரமான இந்த ஜகத்தில்அநாத்மபுத்தி (திருசியம் தான் அல்ல என்ற எண்ணம்) உண்டாவதும் மற்ெருரு கிரந்தி. இக்கிரந்திகள் அழியும்போது தான் பந்தத்தினின்றும் விடுபட்டு முக்தனுகின்ருன். நிரோதஞ் செய்து பார்க்கிறேன் இது நானல்ல இது நானல்ல என்று தள்ளிவிட்டு எங்கும் அகண்டானந்தமாய் தானே எங்குமிருப்பதாய்ப் பாருங்கள். அகில உலகத்தையும் கண்ணுடியில் பிரதிபிம்பம் போலத் தனக்குள்ளேயே பாருங்கள். பிறகு எங்கும் அகிலமும் தானுகவே இருக்கின்றேன் என்ற பாவனையையும் நீக்கி மீதியாயிருக்கிற சின்மாத்ர ரூபமே நான் என்று தன் உண்மை வடிவத்திலேயே தன்னிலையில் அமர்ந்திருங்கள்.

11. ஆகமம் மொழிவதாவது ஜகத்தின் சிருஷ்டிக்கு முன் சின்மாத்திரமூர்த்தியான ஈசன் ஒருவனே உபாதான

மில்லாதவனுக அகிலமான ஜகத்தையும் சிருஷ்டித்தனன். ஈசன் பூரணனுனபடியால் அவனுக்கன்னியமாக ஜகத்து உண்டாவதில்லை. ஆகையினுல் கண்ணுடியினுள் பிரதிபிம்பங்கள் தோற்றுவதுபோலவே தேவனிடத்தில் ஜகத்உன் மீலனம் (தோற்றுவிப்பது) செய்யப்படுகிறதென்னும் கொள்கையே சரியானது.

12. ஜகத் உண்மையாகத் தோன்றுவது பிராந்தியினுல். அதற்கு காரணம் ஒரு வஸ்துவை அவித்தை பூர்வமாக வேறு ஒரு வஸ்துவாக திடபாவனை செய்வதே பிராந்தியின் காரணம். உதாரணமாக ஆத்மாவை அறியாமல் சரீரத்தில் திடமாக ஆத்ம புத்தியிருக்கிறதன்றோ? கேவலம் பாவனையினுலே சிதாத்மா தேகமாகிறது. சொப்பனத்திலிருந்து விழித்துக்கொண்டவனும் இந்திர ஜாலக்காரனது உளவு தெரிந்தவனும் எவ்வாறு வியசனப்படார்களோ அவ்வாறே ஆத்மாவை அறிந்தவர்கள் மாயையினின்று விடுபட்டவர்களாகி ஒருபொழுதும் வியசனப்படார்கள். ஆகையினுல் ஜகத்தானது சொப்பனம்போல் பாவனையேயென்று கருதி சோகத்தை விட்டுவிடவேண்டும். சோகத்தை எப்படி விடுவதென்ருல் சொப்பனபந்து நாசத்தில் சோகமில்லாமலும் சொப்பன தனலாபத்தில் சந்தோஷமில்லாமலும் இருப்பதுபோல சிதாத்மகமான தன் ஆத்மாவை ஜாக்ர பாவங்களான சித்திரங்களுக்கு கண்ணுடிபோன்றதென்று கருதி, ஜாக்கிரத்திலுண்டாகும் சோகம் முதலியவற்ருலும் சலியாதிருந்து பரமானந்தம் பொருந்திய உள்ளம் உடையவர்களாக வேண்டும்.

13. யாதொரு நிலையை அறிந்தால் அகண்டமான அமிர்தத்துவம் உண்டாகிறதோ, எல்லாச் சந்தேகங்களும் நிவிர்த்தியாகின்றனவோ, அறியப்படாததாகட்டும், ஆசைப்படக்கூடியதாகட்டும் ஒன்றும் இல்லையோ, யாதொன்று அறியக்கூடாததோ அது யாது? எல்லா ஜகத்துக்கும் காரணமானதும் ஆதி, மத்யம், அந்தம் இல்லாததும் தேசகாலங்களினுல் பரிச்சின்னப்படாததும் (பாதிக்கப்படாதது) சுத்தமும் அகண்டமுமாகிய சித்து ரூபமானதும் கண்ணுடி

யில் விளங்கும் நகரம்போல் யாதொன்றை ஆசிரயித்து (சார்ந்து) இந்த ஜகத் விளங்குகிறதோ அதுதான் அந்தப் பரமபதம். அந்தப்பதவியை அறிந்தால் அமிர்தத்துவத்தை அடையலாகும்.

14. ஜகத் முழுமையையும் பிரதிபிம்பங்கள் யென்று தெரிந்தால் தெரியாதது வேறு ஒன்றுமேயிராது. இவ்விதம் பரமபதத்தின் உண்மை தெரிந்தவனுக்கு வேறு ஆசைதான் ஏது? அதனை அறிபவன் அதற்குக் கன்னியமாக ஒருவனில்லாததால் அறியக் கூடாததென்று மொழியலாயிற்று. ஆனால் அதனை அறிபனெருவனில்லாததால் அது அறியக்கூடாததென்றும் அதனை அறிந்தால் அழியாத அமிர்தத்துவம் அடையலாமென்றும் மொழிந்தது முன்னுக்குப் பின் விரோதமாக இருக்கிறதே? அறியக் கூடாதது என்றால் ஒருபொழுதும் அறியப்படாதது. அதனை இல்லையென்றே சொல்லவேண்டும். இருக்கிறதென்றால் அறியக் கூடியது அப்பொழுது அறியக் கூடாததென்று சொல்லலாகாதே? ஆகையால் சங்கற்பமற்றிருப்பது அந்தர் திருஷ்டி. அப்படி விலக்கி உன் சுயரூபத்திலமர்ந்திரு. க்ஷணநேரமாவது சுயபாவத்தில் சிந்தனையற்று நிலைத்திருந்து பிறகு உன் ஞாபக சக்தியினால் நீ சுயரூபத்திலமர்ந்திருந்தபொழுது நீ சுயமாக விளங்கினையா அல்லது வேறொன்றினால் விளங்கினையா என்று தெரிந்துகொள்ளலாம். அதன்மேல் அறியக்கூடாதது எவ்விதம் அறியப்பட்டது என்ற சங்கதிகள் யாவும் உனக்கு ஸ்பஷ்டமாக விளங்கும். இவ்விதம் அறியக் கூடாததை அறிந்தால் அழியாதநிலை அடையப்படுகிறது. ஆத்மாவை அறியவேண்டிய மார்க்கம் இதுதான்.

15. சுத்த சித்தாத்ம தத்துவம் எவ்விதத்திலும் அறியக் கூடாததுமன்று. எவ்விதத்திலும் அறியக் கூடியதுமன்று. தத்துவத்தை குருவானவர் உபதேசம் செய்கிறபடியால் முதலில் குருவையடையவேண்டும். ஆகையால் முழுமையும் அறியக் கூடாததன்று. அந்தர்முக திருஷ்டியுடையவனுக்கு சுலபம். திருசியங்களை யாதொன்று பார்க்கிறதோ அவ்வடிவமாகவே அத்தத்துவம் அறியப்படுகிறது. திருசிய

ஞானத்தில் யாதொன்று விளங்குகிறதோ அதனைக்குதற்க மின்றி சூக்ஷம புத்தியினால் ஆராய்ந்து பாருங்கள். ஒளி மாத்திரமே வடிவாகி யாவற்றையும் விளக்கக்கூடிய பான சக்தி (ஞானம்) யிடமிருந்து விளங்கப்படுபவை விலக்கினால் எல்லா விளக்கங்களுக்கும் ஆதாரமான தத்துவம் அதுவாம் அந்த ஒளியான விளக்கும் சக்திதான் சுத்த சித்தாத்ம தத்துவமென்றுணர்வீர்கள். அறிபடுபொருள்கள் தாமாக விளங்குவதில்லை. அறிபவளாலேதான் அறியப்படுகின்றன. சித்தானவள் பொருள்களின் வடிவைக்கொண்டு நானாவாக விளங்கிக்கொண்டிருக்கின்றனள். அறிபடு பொருள்களி னின்றும் இஃதன்று. இஃதன்று என்று விலக்கி உள்நோக் கும் வழியாக இவ்விதம் அறியலாமே ஒழிய உலகங்களுக் கெல்லாம் ஆதாரமான இவ்வித்தை மற்றபொருள்களை அறிவதுபோல் அறியக்கூடாது. ஏனென்றால் இந்த வித் தானவள் அறிபவனுடைய சொரூபமாகவே இருக்கின்ற தனால் அறியப்படுகிறதில்லை. மனக்கண்ணாலே உங்கள் ஆத்மாவைப் பார்வையிடுங்கள். யாதொன்று சொப்பனத் தில் பார்வையிடுகிறதோ அதுதான் முக்யமான நேத்திரம். இந்த ஸ்தூலக்கண்ணல்ல. ஜாக்ரவேளையில் சிந்தையற் றிருப்பதே சமாதி.

16. சம்சாரமானது (உலக வியவகாரம்) அஞ்ஞானத் தினால் ஏற்பட்டு நடந்துவருகிறது. இதற்கு நிவிர்த்தி ஞானத்தினாலென்றே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பரோக்ஷமென்றும் (பிரத்யக்ஷமில்லாதது) அபரோக்ஷ மென்றும் (பிரத்யக்ஷம்) இருவகைப்படும். குருவினால் மொழியப்பட்டதை சிரவணம் செய்தல் பரோக்ஷஞானம் அதனால் சிரத்தை யுதிக்கிரதேயன்றி அஞ்ஞான நிவிர்த்தி யாகாது. சமாதியிலிருந்து உண்டாகும் அபரோக்ஷ விஞ் ஞானத்திற்கே (அறிவு) பிரபஞ்சத்துடன் அஞ்ஞானத்தை நாசஞ்செய்து சுபபலனைக் கொடுக்கும் தன்மை உளது. பரோக்ஷ ஞானத்தை முன்னிட்டு சமாதி கூடினால்தான் அபரோக்ஷ விஞ்ஞானம் உதயமாகின்றது. அத்வைதமான ஒரு நிலை உளது என்று அறிந்தது பரோக்ஷஞானமே.

பிறகு அத்வைதமான தன் ஆத்மதேவதை இன்னதென்று நல்லபுத்தியால் தீர விசாரித்து தன்னால் தீர்மானிக்கப்பட்ட ஆத்மதத்துவத்தை விடாமுயற்சியுடனுகவும் அபரோக்ஷமாக அனுபவம் வருகிற வரையில் அனு சந்தானம் செய்ய வேண்டும். பிறகு நான் அது என்றும் ஞாபகப்படுத்திக் கொள்ளும் பிரத்தியபிஞ்ஞையினல் (வேருன அறிவு அல்லது உணர்வு) சம்சாரத்திற்கு காரணமான மூலாஞ்ஞானம் நாசமாகிவிடும். விகற்பங்கள் அகன்றுவிடுகிறதே தியானத்தின் பக்குவநிலே. ஒரே விதமான விளக்கமே நிர்விகர்ப்பம். அனுத்ம விஷயங்களான அன்னியங்களேப் பாராமலிருந்தால் விகற்பம் அகன்றுவிடும் சித்திரங்களேத் துடைத்துவிட்டால் சுவரானது எவ்விதம் சுத்தமாக நிற்கிறதோ அவ்விதம் நிர்விகற்பம் மிஞ்சுகிறது. விகற்பங்களே நீக்குவது ஒன்றே நிர்விகற்பமான ஆத்மாவை அடைதல். இதற்கு மேல் ஒருவன் அடையக்கூடிய பரிசுத்தமான பதவி ஒன்றுமே கிடையாது. உத்தமர்கள் சீக்கிரத்தில் அடைகிருர்கள். அதமர்கள் அநேக ஜன்மங்களுக்கு பிறகு ஞானமுண்டாகிப் பலனடைகிருர்கள். மத்திம அதிகாரிகள் படிப்படியாக சிரவணம், மனனம், நிதித்தியாசம் முதலியவற்றை அப்பியசித்து, காலக் கிரமத்தில் ஞானத்தை அடைகின்றனர். ஞானத்தையும் ஞேயத்தையும் (அறிவையும் அறிபடு பொருளேயும்) பிரித்துப்பாராமல் ஒன்ருகப் பார்த்தபொழுது அறியப்படாததாக யாதொன்று இருந்ததோ அது விகற்பங்களே நீக்கும்பொழுது அறியப்பட்டதாகின்றது. உத்தமமான ஆத்ம விஞ்ஞானத்தின் கிரமம் இவ்விதமாக விசாரித்துத் தெரிந்துகொண்டால் பின் ஆத்ம தத்துவத்தை உணர்ந்தவர்களாகி கிருதார்த்தராவீர்கள்.

17. திருசியமானது உன் வடிவமன்று. ஆதலால் திருக்கு (அறிவு சொரூபம்) மாத்திர வடிவாயிருக்கின்ருய். திருக்கானது ஒரு காலத்திலும் திருசியமாகாது. அந்த ஆத்ம சொரூபமான திருக்கு சொப்பிரகாசமானது. தேகம், தேசம், காலம் இவைகளின் பேதத்தினுல் விசித்திரங்களுடன் பொருந்தியது. ஆகையால் சங்கற்பம் ஒன்றை

விட்டுவிட்டால் தானாக விளங்கி மீந்திருப்பதான சுத்தசித்தின் வடிவத்தைதன் ஆத்மாவென்று குறிப்பிட்டுணர்வாய். அப்படி உணரும்பொழுது அங்கிருக்கும் தேகாதிகளில் அபிமானமின்றியிருப்பதால் சர்வசம்சாரத்திற்கும் காரணமான அஞ்ஞானம் இலயமாகிவிடும். ஆகாயத்தின் பின் பக்கத்திலாவது, பாதாளத்திலாவது, பூதலத்திலாவது மோக்ஷமென்பதில்லை. சங்கற்பத்தை ஒழிப்பதனுல் சுத்தமான சொரூபத்தின் ஸ்புரணமே (நிலையே) மோக்ஷமென்பதாகும்.

18. குடத்தினுள் வைத்த தீபம் உள்ளில் வியாபித்து பிரகாசிப்பதுபோல இந்த சரீரத்தினுள் சித்பிரகாசமாயிருந்துகொண்டு கூடமான தீபம்போல தேகத்தினுள்ளமட்டிலும் விளங்குகின்றது. குடத்தின் துவாரங்களின் வழியாக தீபப்பிரபையானது வெளிப்படுவதுபோல நேத்திரம் முதலிய துவாரங்களின் வழியாக சித்தானது பின்னும் வெளிப்படுகின்றது. ஆனுல் வாஸ்துவத்தில் சித்திற்கு வெளிப்படுதல் என்பதில்லை. ஏனென்ருல் அது பூரணமானதாலும் செய்கையின்றியதாகையாலும்.

19. பூர்ணுத்ம சொரூபத்தை உணர்ந்தவர்களாக இருந்தும் பிராரப்தத்தினுல் ஏற்படும் சுகதுக்கங்களால் வருந்துகின்றவர்கள் அதம ஞானிகளாவார்கள். எவர்கள் பிராரப்தத்தையடைந்து புசித்தாலும் மதுவுண்ட வண்டுபோல், அது தெரியாதிருக்கின்றனரோ அவர்கள் மத்திம ஞானிகளாவார்கள். எவர்கள் கோடிக்கணக்கான பிராரப்தங்களாலும் தங்கள் நிலைதவராதிருக்கின்றனரோ, ஆபத்துகள் கூட்டமாக வந்தாலும் அதைரியப்படாமலிருக்கின்றனரோ, மகா சுகத்திலும் சந்தோஷப்படாதிருக்கின்றனரோ, அத்தகைய, உள்ளே, சாந்தராகவும் வெளியே உலகோரைப் போலவும் இருப்பவருமான அவர்கள் ஞானிகளில் உத்தமராவார்கள்.

20. வாசனைகளை (பற்றுகளை) அகற்றுவதற்கே சாதனங்கள் ஏற்பட்டுள்ளன. வாசனைகள் எதுவரையிலும் புத்தியை

சுற்றிக்கொண்டிருக்கின்றனவோ அதுவரையில் அவனுக்கு சாதனையின் அபேக்ஷையுண்டு வாசனை நீங்கினல் அது வாகிவிடுகிறுன். வாசனைகள் மூன்று விதம். அதாவது அபராதம், கர்மம், காமம். அசிரத்தை, விபரீதமாக கிரகித்துக் கொள்ளுவது, பரதத்துவம் இல்லையென்று சொல்லுவது அபராதமாம். இதனுல் அநேகர் சம்சாரத்தையடைகின்றனர். முன்செய்த பாபசம்ஸ்காரங்களினுல் புத்தியினிடத்தே உபதேசித்ததை கிரகிக்கவொட்டாமல் தடை செய்கின்றது எதுவோ அதுவே கர்மவாசனை. கர்த்தவ்ய சேஷத்தையே காமமென்னலாகும். இது கணக்கிட முடியாதது. ஆகாயத்திலும் விஸ்தாரமானது. பர்வதத்திலும் ஸ்திரமானது. இந்த ஆசாபிசாசத்தினுல் ஜனங்கள் கவரப்பட்டு உன்மத்தர்கள்போல் இருக்கிறுர்கள். தகிக்கப்பட்டு கதறுகின்றனர். இவர்களில் பாக்யவான்கள் மகாமந்திரத்தை அடுத்ததினுல் அப்பிசாசினிடமிருந்து விடுபட்டு குளிர்ச்சியுடையவராகி விளங்குகின்றனர். எக்காரணத்தினுல் வாசனைகளால் மனது ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றதோ அதுபற்றி நித்யாபரோக்ஷமான ஆத்மதத்துவம் விளங்காதிருக்கின்றது. ஆகையால் வாசனைகளின் நாசமே எல்லாச் சாதனங்களினுடைய பலனுமாகும். முன்னது அபராதமென்று நிச்சயிப்பதினுலேயே நிவர்த்தியாகின்றது. இரண்டாவது ஒரு ஜன்மத்திலாவது அநேக ஜன்மங்களிலாவது ஈஸ்வரனுடைய பிரசாதத்தினுல் நிவர்த்தியாகிறதேயன்றி கோடியுக்திகளாலும் ஒழிவதன்று. மூன்ருவது வைராக்கியம் முதலிய சாதனங்களால் நிவர்த்தியாகின்றது.

21. யாவற்றிற்கும் மூலமான முதன்மை சாதனம் முமூக்ஷுத்துவமேயாகும். (பரிபூர்ணமடைதலில் விருப்பம்) முமூக்ஷுக்களல்லாதவர்களிடம் காணப்படும் சிரவண மனனம் முதலியன சில்பம் போன்றதாகும். அதாவது சபைக்கு யோக்யமான சாஸ்திரஞானம். முமூக்ஷை தீவிரமாயிருப்பதினுல் சீக்கிரத்தில் பலனுண்டாகும். அது பிரவிருத்தியை உற்பத்தி செய்கிறது. சாதனங்களிலுண்டாகும் பிர

விர்த்தியே தற்பரதை (சித்சக்தி) யென்று சொல்லப்படும் எங்ஙனம் தேகம் முழுவதும் தகிக்கப்பட்டவனுக்கு குளிர்ச்சி யையன்றி வேறொன்றையும் நாடாதோ அங்ஙனமே எப் பொழுதும் எவ்விதத்திலும் முக்தியன்றி வேறொன்றையும் அபேக்ஷியாதிருக்கும் முமூக்ஷையே தீவிரமானதும் பலனைச் சாதிப்பதுமாகும். மற்றவைகளில் தோஷ திருஷ்டியும் வைராக்கியத்தினாலும் முமூக்ஷுத்துவமுண்டாகிறது தோஷ திருஷ்டியினால் விஷயங்களிலுண்டாகும் பிரீதியை அறச் செய்வதான வைராக்கியமும் வைராக்கியத்தினால் தீவிர முமூ க்ஷுத்துவமும் அதனால் தற்பரதையின் உற்பத்தியும் அதனால் சாதனங்களில் அதிதீவிரமான பிரவிர்த்தியும் அதனால் அற்புதமான பலனும் அடையப்படுகின்றன. எவனுடைய புத்தியில் வாசனைகள் அற்பமோ அவனுக்கு அற்பசாதனை யிலேயே ஞான சித்தியுண்டாகின்றது. அன்னியனுடைய விவகாரத்தைச் செய்பவனுடைய சந்தோஷமும் வியசனமும் எவ்விதம் அன்னியனுக்கே ஆகுமோ, தன் இருதயச்தி லிராவோ அவ்விதமே எல்லா விவகாரங்களிலும் உத்தம ஞானிகள் எங்குஞ் சமமான நிலையுடனிருப்பர். அவர் களிடத்தில் வேத்தியம் (அறிபடுபொருள்) இன்றியே வித்தி (அறிவு) இருக்கின்றது.

22. வித்யா கீதை:—எதனிடத்தே இந்த உலகம் யாவும் கண்ணாடியிற் பிரதிபிம்பம்போல உற்பத்தியாகி நிலைபெற்று இலயமடைந்து எல்லோருக்கும் சதாகாணப்படுகின்றதோ இதுவே தேவியான என்னுடைய பரவடிவமென்று சொல்லப் படும். அத்வைத ஞானமேபர விஞ்ஞானமென்று கூறப் படும் ஞேயங்களகன்ற பொழுது சுத்தமனதால் அபரோக்ஷ மாக அனுபவிக்கப்படுவதே அத்வைத விஞ்ஞானம். சித்த மானது ஆத்மாவினிடம் ஒன்றுபட்டுச் சேர்ந்த பின்பு அதுவே நான் என்றுண்டாகும் அகண்டாகார ஞானமே பரவிஞ்ஞானமெனப்பட்டது. அறிபவனும், அறிவும், அறி படுபொருளும், பலனும் எப்பொழுது ஒன்றுகின்றனவோ அப்பொழுதுதான் எல்லாப் பயமும் நீங்கிய பரமமான மோக்ஷம். ஞாதா (அறிபவன்) முதற்கொண்டு பலன்

வரையிலும் வாஸ்துவத்தில் ஒரு பேதமுமில்லை. வியவகார மாத்திரத்திற்காக அவைகளிடம் பேதம் கற்பிக்கப்பட்டிருக் கிறது. ஆத்மா ஒன்றுதானே மாயையினால் அறிபவனென் றும், அறிவென்றும், அறியப்படுபொருளென்றும் பலனென் றும் எம்மட்டிலும் விளங்குகிறதோ அம்மட்டிலும் சம்சார மானது மலைபோல் அசையாதிருக்கும். எக்காலத்தில் இவைகள் பேதமின்றி விளங்குமோ அப்பொழுது காற்றிலடி பட்டமேகம்போல் சம்சாரம் இலயமாகிவிடும். இவ்விதமான மோக்ஷத்திற்கு ஊக்கமே சாதனம். இதையடையவொட் டாது நாசஞ் செய்யக் கூடிய தோஷங்கள் புத்தியினிடம் இருக்கின்றன. அவைகள் மூன்றுவிதம். நம்பிக்கையின்மை காமவாசனை, ஜாட்டியதை (மந்தமதி). நம்பிக்கையின்மை குதர்க்க சிந்தனையை ஒழித்து சத்தான தர்க்கத்தை அப் யாசஞ் செய்வதால் நீங்கும். காமவாசனை வைராக்யத்தால் நீங்கும். ஜாட்டியதை தேவியை சேவிப்பதால் நீங்கும். துவைதத் தோற்றமின்றியும் ஜாக்ர முதலியவற்றில் வியவ கரித்தாலும் உறங்குபவன் போலிருக்கிறானே அப்பொழுது தான் சித்தி பூர்ணத்தன்மையடைந்ததாகும். இப்படிப் பட்டவன் ஒருபொழுதும் சமாதியை விட்டகலான் சம்சய மாவது, காமமாவது, வியவகாரத்தில் நிர்ப்பயமாவது சுக துக்கங்களாவது எவனுக்கு சற்றேனுமில்லையோ அவன் சித்தர்களில் உத்தமனென்று மதிக்கத் தக்கவன். தேவிக்கும் இவனுக்கும் வித்யாசமில்லை.

23. பக்தர்களுக்கு அன்னியங்களில் கவனமற்றுவிடுகிற படியாலும் ஆத்ம தேவதையினிடம் தற்பரதையுண்டாவ தாலும் சீக்கிரம் ஞானம் அடையக்கூடியதாகிறது. இதை நிரூபணஞ்செய்வதால் அவன் சித்தமானது சலியாது சுத்த சித்தாத்ம வடிவமாகி அவன் எங்குசென்றாலும் சிவாகார வடிவமாகச் செய்துவிடுகின்றது. அவன் உத்தம விஞ் ஞானியும் ஜீவன் முக்தனுமாவன். இவர்கள் மானாவ மானங்களாலாவது, இலாபநஷ்டங்களாலாவது, ஜயாப ஜயங்களாலாவது முகத்தில் விகாரங்கள் ஏற்படுவதில்லை. மகத்தான ஆபத்துகளிலும் சாந்தாத்மாவாக இருப்பர்.

24. சாதனை செய்பவன் முதலில் தன்னையே எப்பொழுதும் பரீக்ஷை செய்துகொள்ளவேண்டும். பிறருடைய குணதோஷங்களை விசாரணை செய்ய விருப்பமில்லாமல் தன்னையே விசாரித்துப் பார்ப்பதில் சிரத்தை உண்டாகும் பொழுது எல்லாச் சாதனங்களும் உடையவனாகி சித்தியடைகிறான். சங்கற்பத்தை ஒழித்து சொரூபத்தை புத்தியினால் செம்மையாக குறிப்பிட்டுணர்ந்தவன் பந்தத்திலிருந்து விடுபட்டு கிருதார்த்தனாகிறான். ஞானிகளுக்கு கர்மமில்லை. ஆத்மாவின் சொரூபம் சுகமேயாகும்.

25 மண்ணிலிருந்து கடங்கள்போலும், பொன்னிலிருந்து பூஷணங்கள்போலும், கற்பாறையிலிருந்து பிரதிமைகள்போலும் சித்தாத்மாவிலிருந்து ஜகத்தாகும். அகண்டமான இரண்டற்ற சித்சக்தியான திரிபுரையே விளங்குகின்றாள். அவளே அவித்தையென்றதும் வித்தையென்றதுமான பந்தமோக்ஷங்களுடைய சாதனம். இதை விசாரித்துணரும் ஜனங்கள் சோகத்தை அடையார்கள்.

சுபம்.

உ

சிவமயம்

மெய்கண்டார் இயற்றிய திவ்ஞானபோதத்தின் அமைப்பு

சித்தாந்த சாஸ்திர விளக்கம்

1. **அனைத்தையும் ஒடுக்கும் அரனே முழுமுதல்**
அரனே சங்காரகர்த்தாவாக இருக்கிறார்.

2. **ஆண்டவனருளால் மீண்டும் உலகுள.**
அக்கர்த்தா வினாலேயே மறுபடியும் உலகம் தோற்று விக்கப்படுகிறது.

3. **இன்னுடலகத்து உயிர் விளக்கமே மன்னும்.**
உடம்பினுள் உயிர் விளக்கம் உண்டாகிறது.

4. **ஈண்டிய உயிர்நிலை ஐவகை என்ப.**
சாக்ரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்து நிலைகளை உயிர் அடைகிறது.

5. **உயிர்கள் பால்த்தோன்றும் உடையவனுதவி.**
உயிர்களுக்கு ஆண்டவனுதவி கிடைக்கிறது

6. **ஊழே ஒரு நிலை இரு நிலைப்பொருளுள.**
ஊழின்படிசெயல், நடக்கும். இன்பதுன்பமென்று இருவகையாக அது அமைந்திருக்கிறது.

7. **என்றுஞ் சார்ந்து நின்றதே உயிர்நிலை.**
உயிர், பதியை அல்லது பாசத்தை சார்ந்து நிற்கும்.

8. **ஏற்ற மாமுணர்வை இறையே நல்கும்.**
பதிஞானம் இறைவனருளால் அடையப்படுகிறது.

9. **ஐயனைந்தெழுத்தால் அருமலங்கழலும்.**
ஐந்தெழுத்தின் மகிமையால் பாசநீக்கம் உண்டாகிறது

10. **ஒட்டிய கட்டை விட்ட கல் வீடு**
பாச நீக்கத்தால் வீடுபேறு உண்டாகிறது.

11. **ஓவாவின்பம் இறையடியுறுதல்.**
பேரானந்தம் திருவடி சேர்தலால் உண்டாகிறது.

12. **ஔவியமிலர் விடத்து அரன்வெளியாமே.**
தன்முனைப்பு நீங்கினால் சிவதெரிசனம் நிகழ்கிறது.